உ

முருகக் கடவுள் துணை

# செயூர்த் தல வரலாறு

செய்யூர் - முத்தைய முதலியார், பீ. ஏ.

இயற்றியது

சென்னை :

காக்ஸ்டன் அச்சு யந்திரசாலை

1944

விலை 0-2-0

# சிறப்புப் பாயிரம்

---

தணிகைமணி-ராவ்பஹதூர். வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

இயற்றியது

கலை மயிலோன் திருவடிக் கேமனங் காதலித்தோன்
நலவரம் யாவும் பெறத்தகு பண்பினன் நற்றவத்தோன்
பலவகைச் சீர்கொள் முத்தையவேள் பாரோர் பாவுசெயூர்த்
தலைவர லாற்றை யெழுதிப் பதித்திவண் தந்தனனே.

65520



உ

முருகன் துணை

# முகவுரை

எல்லாம் வல்ல எனது இறைவன் ஸ்ரீ கந்தசுவாமியார் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் இச் சேயூருக்குத் தலபுராணம் எதுவும் இதுவரை வெளிவந்திலது; ஆகவே, இவ்வூரின் சிறப்பையும், இறைவன் பெருமையையும், இதர வரலாறுகளையும் அன்பர்கள் யாவரும் அறிந்து ஆனந்திக்குமாறு இச் சிறுநூலை இப்போது எனக்குத் தெரிந்தவரையில் எழுதி வெளியிடலானேன்.

இவ்வூரைப்பற்றிய அரிய பெரிய விஷயங்கள், பெரியோர் பலர் அறிந்திருக்கக் கூடும். அத்தகைய விஷயங்களேனும், இவ்வூரைப்பற்றிய நால்வருடைய பாடல்களேனும், அருணகிரியாருடைய திருப்புகழ்ப் பாக்களேனும், அன்பர்களுக்குக் கிடைக்குமாயின், அவற்றை உடனே எனக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இந்நூலைத் தொகுத்து அச்சிடும்வழி எனக்குடனிருந் துதவிய என் நண்பர் திருவாளர் ராவ்பஹதூர் V. S. செங்கல்வராய பிள்ளை எம். எ., அவர்களுக்கு அனேக வந்தனமளிக்கின்றேன்.

முருகபிரான்மீதுள்ள பக்தி முன்னிலையில் இந்நூல் வெளிவருவதால், இதிலுள்ள குணங்களை மாத்திரம் கொண்டு குற்றங்களை மன்னிக்குமாறு பெரியோர்களை வேண்டிக்கொள்கின்றேன்.

செய்யூர்
1 - 6 - '44

இங்ஙனம
C. முத்தைய முதலியார்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| I | சேயூர் மான்மியம் | 9 |
| | 1. சேயூர்த் தல விளக்கம் | ,, |
| | 2. ஆலய அமைப்பு | 10 |
| | 3. தலப்பெயர்க் காரணம் | 13 |
| | 4. சேயூரின் பெயர்களும் பெயராட்சியும் | 14 |
| II. | சேயூர்ப பழஞ் சிறப்பு | 17 |
| III | வளவன் கழுக்குன்றன் பேறு பெற்றது | 19 |
| IV. | தேவர்கள முனிவர்கள் வழி பட்டது | 21 |
| V. | தலசமபந்தமான நூல்களும் நூற்பகுதிகளும் | 22 |
| | 1. சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் | ,, |
| | 2. சேயூர்க் கலம்பகம் | ,, |
| | 3. சேயூர் முருகன் உலா | ,, |
| | 4. சேயூர் முருகன் பதிகக் கோவை | 23 |
| | 5. திருப்புகழ் | 24 |
| | 6. நெஞ்சு விடு தூது | 25 |
| VI. | தீர்த்தம் | 26 |
| VII. | திருவிழாக்கள் | 27 |
| VIII. | கோயில் வருமானம் | 28 |
| IX. | ஆலய நிர்வாகம் | 30 |
| X. | இவ்வூரில் உள்ள இதர கோயில்கள் | 31 |
| | (i) ஈஸ்வரன் கோயில் | ,, |
| | (ii) பெருமாள் கோயில் | 33 |


(iii) விநாயகர் கோயில் - - - 33
(iv) கைலாசநாதர் கோயில் - - 34
(v) கிராம தேவதைகள் - - - ,,
(vi) நவசந்திகளில் கோயில்கள் - - ,,
XI. ஊரின் முற்கால தற்கால நிலைமை - - 35
அநுபந்தம் — கல்வெட்டுகள் - - 37
(i) சாசனங்களின் காலம் - - - 38
(ii) ஊரின் விளக்கம் - - - ,,
(iii) தானங்கள் - - - - ,,
(iv) தானங்களின் விவரம் - - 39
(v) தானம் செய்தவர்களின் பெயர விவரங்கள் - - - - ,,


---

## ஆலய அமைப்பு விளக்கம்

1. கோபுர வாயில்
2. வெளி பிராகாரம்
3. உள்பிராகாரம்
4. மூலஸ்தானம்
5. தீபாராதனை மண்டபம்
6. ஆறுமுகசுவாமி
7. துவஜஸ்தம்பம்
8. அம்மன் கோயில்
9. சர்வ வாத்திய மண்டபம்
10. சோமநாதர், மீனாக்ஷியம்மை
11. பள்ளியறை
12. உத்சவர் மண்டபம்
13. மடைப்பள்ளி
14. நவக்கிரகங்களின் கோயில்
15. மரக்கொட்டாய்
16. உக்கிராணம்
17. விநாயகர் கோயில்
18. முத்துக்குமாரசுவாமி
19. நந்தவனம்
20. ஷை
21. சாமான் அறை
22. யாகசாலை
23. வாகன மண்டபம்
24. கிணறு

# ஸ்ரீ கந்தசுவாமியார் ஆலய அமைப்பு





"ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்"

உ

முருகன் துணை

# சேயூர்த் தல வரலாறு

## I. சேயூர் மான்மியம்

### 1. சேயூர்த் தல விளக்கம் :

புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலே, பல வளங்களும் பொருந்திய தொண்டை நாட்டிலே சிறப்பு வாய்ந்த சுப்பிரமணிய ஸ்தலங்கள் பலவுள்ளன. அவற்றுள் ஒன்றாகும் செய்யூர் என்று சொல்லப்படும் இச் சேயூர்.

சேயூர் என்றால் முருகனுக்கு இருப்பிடமாகிய ஊர் என்பது பொருள். இவ்வூர் செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலூக்காவைச் சேர்ந்தது. தென்னிந்திய இருப்புப் பாதையில் சென்னையிலிருந்து 50 ஆவது மைல் மதுராந்தகம். அங்கிருந்து கிழக்கே 16 மைல் தூரத்தில் உள்ளது சேயூர். மதுராந்தகத்துக்கும் சேயூருக்கும் பஸ் தினந்தோறும் அடிக்கடி போகின்றது. சென்னையிலிருந்து இவ்வூர் (Buckhingham) பக்கிங்காம் கால்வழியாக 50 மைல் தூரத்தில் உள்ளது. இவ்வூர் முருகபிரானுக்குகந்த திவ்ய தலங்களுள் ஒன்று. இங்கு முருகக் கடவுளுக்குத் தனி ஆலயம் உளது; மிகவும் பிரசித்தி பெற்றது; திருப்புகழ்ப் பாடல் பெற்றது.

இவ்வூரின் மொத்த ஜனத்தொகை இப்போது 6200. அதில் சுமார் 3000பேர் ஆதி திராவிடர்கள்; சேரியில் வசிப்பவர்கள். இவ்வூருக்குக் கிராம பஞ்சாயத்தும், கூட்டுறவுச் சங்கங்களுமுண்டு. இவையன்றி லோகல்பண்டு டிஸ்பென்சரி, சால்ட்டு ஆபீஸ், சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன், போஸ்டாபீஸ் முதலிய நிலையங்களும் உண்டு. கடைவீதியில் சகல சரக்குகளும் ஏராளமாய்க் கிடைக்கும். சுற்றுப்பக்கத்து ஜனங்களின் சௌகரியத்துக்காக வியாழக்கிழமை தோறும் பெரிய தொரு சநதை இங்கே கூடுகின்றது. ஒவ்வொரு சந்தையிலும் சுமார் 8000 ரூபாயுக்கு வியாபாரம் நடைபெறும்.

2. ஆலய அமைபபு : [ஏழாவது பக்கம் பார்க்க.]

ஸ்ரீகந்தசுவாமியாருடைய திருக்கோயில் ஊருக்கு நடு மத்தியில் தெற்கு நோக்கியிருக்கிறது. மதில் சுவரின் நீளம் தெற்கு வடக்கில் 59 கஜம். கிழக்கு மேற்கில் 57 கஜம். மேற்கு மதிலைச் சார்ந்து ஒரு சிறிய நந்தவனமும், அதற்கு எதிரில் ஒரு பிள்ளையார் கோயிலும் உண்டு. முகத்துவாரத்தில் கோபுரம் இல்லை. ஆனால், மூலஸ்தானத்துக்கு மேலும் அமமன் கோயிலுக்கு மேலும் அழகிய சிறு கோபுரங்கள் இரண்டு இருக்கின்றன. கோயிலுக்குப் பிராகாரஙகள் இரண்டு. வெளிப் பிராகாரத்துக்குத் தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளி, வடகிழக்கு மூலையில் யாகசாலை, தென்மேற்கு மூலையில் பிள்ளையார் கோயில். உள் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் சம்ஹாரமூர்த்தி யென்கிற முத்துக்குமாரசாமி, வடக்கே சண்டேசுரா, விநாயகர், கழுக்குன்றா, கைலாசநாதர், சிவானந்த வல்லி, பிர்ம்மா, விஷ்ணு, வீரபாகு, ஸ்ரீபலிநாயகர், அஸ்த்ர தேவர், தண்டபாணி முதலிய விக்கிரகங்கள் இருக்கின்றன.

மூலஸ்தானம் கிழக்கு நோக்குகின்றது. இங்கே திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானுகிய சுப்பிரமணியர், வள்ளியம்மை தெய்வயானை சமேதராய், மிகவும் கம்பீரத்துடனும் மெத்த பொலிவுடனும் விளங்குகின்றார். விக்கிரகம் சுமார் 2½ அடி உயரம். தீபாராதனை காலங்களில் விக்கிரகத்தின் கம்பீரமான தோற்றம் பக்தர்களுக்குப் பரவசத்தையும் பயபக்தியையும், மயிர்க்கூச்சலையும் உண்டுபண்ணும்.

கர்ப்பக்கிரஹ வாயிலுக்கு வடபுறத்தில் சிலா கஜலக்ஷ்மி விக்கிரகமும், தென் புறத்தில் சிலா விநாயகர் விக்கிரகமும் சென்ற 1934-வது ஆண்டில் நூதனமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மூலஸ்தானத்துக்கு எதிரில் தீபாராதனை மண்டபம். இந்த மண்டபத்துக்குப் பிரவேசிக்க இரண்டு வாயில்கள் உண்டு. தெற்கேயுள்ளது பழமையானது. கிழக்கேயுள்ளது நூதனமானது. சென்ற 1943-ஆவது ஆண்டில் தீபாராதனை மண்டபத்தின் மேற்புறத்தை உயர்த்தியும், பழுது பார்த்தும், கீழ்த்திசையில் நூதனவாயில் வைத்தும், அதற்கெதிரில் ஒரு சிறு மண்டபம கட்டியும் சிற்சில திருப்பணிகள் நடந்தேறின. இங்ஙனம் செய்ததில் இபபோது மண்டபத்தில் ஏராளமான வெளிச்ச முண்டாயிற்று. ஜனக் கூட்டம தங்கும்படி இடவிசாலமும் ஏற்பட்டது. அல்லாமலும் வெளிப் பிராகாரத்தில் உள்ளவர்கள்கூட நிம்மதியுடன் மூலஸ்தான தரிசனம் செய்ய மெத்த சௌகரியமா யிருக்கிறது.

தீபாராதனை மண்டபத்தின் வட கோடியில் ஆறுமுக சுவாமியார் விக்கிரகம் தெற்கு நோக்கி கோபுர வாயிலுக்கு

நேராக அமைந்திருக்கிறது இவருடைய தரிசனம் கோபுர வாயிலுக்கு வெளியிலுள்ள பலவகுப்பு ஜனங்களுக்கும் சதாகாலத்திலும் கிடைக்கும்.

மூலஸ்தானத்துக்குத் தெற்கே யுள்ளது உற்சவர் மண்டபம். இதற்கு இரண்டு அறைகள் உண்டு. ஒன்று உற்சவர் பள்ளிகொள்ளும் கண்ணடி அறை. மற்றொன்றில் சோமநாத ஸ்வாமியும் மீனாக்ஷியம்மையும் வீற்றிருக்கின்றனர். அம்மையார் சிலா விக்கிரகம் சென்ற 1934-ஆம் ஆண்டில் நூதனமாய் பிரதிஷ்டை செய்யபபட்டது.

தீபாராதனை மண்டபத்துக்கு வடகிழக்கில் அம்மன் கோயில் பிரத்தியேகமாய்க் கட்டப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு அறைகளில் வள்ளியம்மை தெய்வயானை விக்கிரகங்கள் இருக்கின்றன. உற்சவ காலஙகளில் இந்த அம்மன் கோயிலுக்கு எதிர் மண்டபத்தில் உற்சவர் வீற்றிருபபார். இங்கேதான் தீபாராதனைகளும கேளிக்கைகளும் சாவ வாததியங்களும் நடைபெறுவது வழக்கம். இதற்கு ஜனக்கூட்டம் ஏராளமாய்ச் சேரும. இவவிடத்தில் வெகு ஜனங்கள் தங்குவதற்கு எட்டுககால மண்டபம் ஒன்று சென்ற 1936-ஆம் ஆண்டில நூதனமாய்க் கட்டப்பட்டது. உற்சவ காலங்களில் இவவாலயத்தில் நடைபெறும் சர்வவாத்தியம் சாஸதிரோக்தமாயும், விற்பன்னர்கள் கேட்டு வியப்புறததக்கதாயு மிருக்கும. அம்மன் கோயிலுக்குக் கிழக்கே மேட்டு உககிராணமும், அதற்குத் தென்கிழக்கில் நவக்கிரக கோயிலும இருககின்றன.

இவ்வாலயம் அளவிற் சிறியதான போதிலும், கோயிலின் அமைப்பும், வேலைப்பாடும், கண்டவா மனத்தைக் கவரக்கூடியதா யிருக்கின்றன.

### 3. தலப்பெயர்க் காரணம் :

சேயூர், அதாவது முருகனுடைய ஊர். சேய் என்னும் பெயர் முருக வேளுக்குரிய பழைய பெயர்களுள் ஒன்று.

"சேயோன் மேய மைவரை உலகமும்"—தொல்காப்பியம்;
"காஅய் கடவுள் சேஎய் செவ்வேள்"—பரிபாடல்
"மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
"தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேய்"—
திருமுருகாற்றுப்படை.

சேய்க்கு உரிய ஊர், சேய் வாழும ஊர — சேயூர். சூரனொடு பொருவதற்குச் சென்ற சேயும், அவர் படைவீரர்களும் தங்குவதற்காகத் தேவ தச்சனால் நிருமிக்கப்பட்ட பழைய தலமொன்று கும்பகோணத்துக்கு அருகில் உள்ளது. அதற்குச் சேய்நல்லூர் என்று பெயர். அதுபோலவே சேயூர் என்னும் இவ்வூர் மிகப் பழைய ஊராக இருந்திருத்தல் வேண்டும். அல்லது புதிதாக ஊர் உண்டாக்கிய காலத்தில் முருகக்கடவுளின் கோயில் இருக்கக்கண்டு அவ்வூர்க்குச் சேயூர் எனப்பெயரிட்டிருக்கவேண்டும். எனவே, முருகக்கடவுளது இருப்பிடம் சேயூர் என்பதும், கடவுளால் அவ்வூர்க்குப் பெயரேயன்றி, ஊரினால் கடவுளுக்குப் பெயர் வந்ததல்லவென்பதும் புலனாகின்றன. இக்கோயிலானது, மிகப் பழைய கோயிலானதால், வீதிகள் நாளுக்கு நாள் உயர்ந்து செல்லவும், பிராகார மட்டில் பூமி மட்டத்துக்குச் சிறிது தாழ்ந்தே காட்டுகிறது. 'சேயூர்' என்பது 'செய்யூர்' என மருவி இக்காலத்தில் வழங்குகின்றது. திருநெல்வேலி ஜில்லாவில் 'வேளூர்' என்னும் தலம் 'வெள்ளூர்' எனத்திரிந்து வழங்குகின்றதாம்.

### 4. சேயூரின் பெயர்களும் பெயராட்சியும் :

இவ்வூருக்குச் 'செய்கை', 'செயூர்', 'சேயூர்', செய்கைநகர்', 'செய்கையம்பதி,' 'வளவநகர்,' 'அயில் வனம்,' என்று பல பெயர்கள் உள்ளன.

செய்கை : "செய்கைக் கந்தன்," "செய்கை வளம் பதி," "செய்கைநகா," எனச் சேயூர் முருகன் பிள்ளைத் தமிழில் இத்தலம் குறிக்கப்பட்டுளது. அயில்வனம் என்பது வேலங்காடு போலும்.

சேயூர் : *சமர மயூரா குமர செயூரா*
*தாலே தாலேலோ —*

*தாலப்பருவம், பிள்ளைத்தமிழ்.*

வளவநகர் : 'வளவர் வளம்பதி,' 'வளவர் பொற்பதி எனவும் ஷ பிள்ளைத்தமிழில் தலப்பெயர் ஆட்சியுள்ளது'. வளவன் என்னும் சொல்லுக்குச் 'சோழன்' என்பது பொருள். சோழனுடைய நகரம எனப பொருள்படும். 'கழுக்குன்றன்' என்னும் சோழ வம்சத்துப பெரியார் ஒருவர் இவ்வூர்க் கோயில் திருப்பணி ஆதிய சகலமும் செய்தனர். "கழுக்குன்றனும் தக்க செம்பிய வளவன் வந்துனக் காலயம் சகலமுந் தநததன்பின்" — என்பது பிள்ளைத் தமிழ். சுமார் 800 வருஷங்களுக்கு முன் அரசாண்ட குலோத்துங்க சோழன் (1070 A. D.—1118) குமாரன் ஆதொண்டைச் சக்கரவர்த்தி ஆண்டது பற்றி வளவ நகர் என்னப்பட்டது. இவ்வூர்களில் குடியேறிய வேளாளர் தொண்டைமண்டல வேளாளர் என்றழைக்கப்பட்டனர். அவர்களுக்கு அக்காலத்தில் கொண்டைகட்டி வேளாளர்

என்றும் பெயருண்டு. அக்காலத்தில் இவர்கள் *ஈழ முதலான பல நாடுகளிலும் பரவிச் சகல வருணத்தார்களுக்கும் மேற்கொண்ட பதவி வகித்துச் செவ்வனே ஆட்சி செய்து பெரும்பெயர் பெற்றூர்கள். அன்னோரனைவருக்கும் ஆதிநாயக தலமாய் ஏற்பட்டது இச்சேயூர். இவ்வூரார சோழவம் சத்தைச் சார்ந்தவர்களென்பது "வளவதிரையர்" என்றும், "வளவேச கோத்திரத்தார்" என்றும் இப்போதும் வழங்கி வரும் இவர்களுடைய கோத்திரப பெயரான் விளங்குகிறது. "சோழர்" குடும்பம் என்று இப்போதும் இவ்வூரில் ஒரு குடும்பம் உள்ளது.

ஆதொண்டைச் சக்கரவர்த்தி சோழமண்டலத்தை விட்டுக் காஞ்சி மண்டலத்தை அடைந்து, குறும்பர்களைச் சிதற அடித்துத் தன்னுடன் வந்த வேளாளர்களைப் பற்பல இடங்களிலும் குடியேற்றினன் என்றும், ஆகவே அவர்களுக்குத் தொண்டைமண்டல வேளாளர் என்று பெயர் வந்ததென்றும் ஒரு சாரார் சொல்கின்றனர். கி.பி. 7-ஆவது நூற்றுண்டில் சேயூரில் வேளாளர்கள் சோழராஜனுக்குப் பிரதிநிதியாயிருந்து பல கோட்டங்களையும் ஆண்டு வந்தனரென்றும், சமணமதம் மேற்பட்டபோது இவர்களும் காலத்திற்கேற்ப அந்த மதத்தைத் தழுவிப் பின்னர்த் திருநாவுக்கரசு நாயனுர், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் இவர்கள் காலத்தில் அம்மதம் க்ஷீணதசை அடைந்தபோது இவர்களும் தங்கள் பழைய சைவமதத்தைக் கைப்பற்றினர் என்றும் மற்ருெரு சாரார் சொல்கின்றனர்.

---

* இது "யாழ்ப்பாண சரிதம்" என்னும் நூலில் "செய்யூர் வேளாளன் இருமரபும் துய்ய தனிநாயக முதலியை வெடுந்தீவுக்கு அதிபதியாக்கினுன்" என வருதலால் அறியக் கிடக்கின்றது.

தொண்டைமான் வம்சத்தைச் சார்ந்த சைவ சிரோன் மணி ஒற்றிக்கொண்டான் தநயன் கழுக்குன்றன் என்பவன் இவ்வூா ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்தனனெனவும், முதல திருவிழா 1522 கி. பி. அதாவது 420 வருஷங்களுக்குமுன் விஷு வருஷம் தைமாதத்தில் அதாவது 1522 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதெனவும் சொல்லபபடுகிறது.

வைவத் துரந்தாடு முரகக் குலேசன்மகன்
மகனுகு மொரு தொண்டைமான்
வாரிதித் திரைநல்கு மன்னன் பெரும்பேர்
வரம்பெற்ற வொற்றி கொண்டான்

சைவத் தவப்பயனை யொத்தவன் வழிவந்த
தநயன் கழுக்குன்றனுந்
தக்கசெம் பியவளவன் வந்தனக் காலயம்
சகலமுந் தந்தசுற்பின்

பௌவத தலத்தெழு சகாபதமோ ராயிரத்
தொருநாலு நூற்றின் மேலும்
பயிலுநாற் பத்தெழு வருடமாம் விடுவருட
மகரம் பகுத்த திருநாட்

டெய்வத திருத்தே ருருட்டியது போலவிச்
சிறுதே ருருட்டி யருளே
செய்கையாய் சரவணப் பொய்கையாய் தோகையாய்
சிறுதே ருருட்டி யருளே.

— சிறுதேர்பபருவம், 6.

# II. சேயூர்ப் பழஞ் சிறப்பு

சேயூர் என்பது தொன்றுதொட்டு நல்ல நாகரிக நிலையில் சிறந்தோங்கி வரும் ஒரு திவ்விய ஸ்தலமாகும். கடற்கரைக்குச் சமீபத்தில் உள்ள பெருமையால், உப்பளங்களை விசேஷமாகப் பெற்று, மேற்படி உப்பு வருமானத்தாலும், கடற்கரைக் கிராமங்களிலுள்ள தென்னை, மா, பலா, முந்திரி முதலிய விருக்ஷ வருமானங்களாலும், இடையறாத செல்வத்தைப் பெற்று என்றும் லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்ற தலமாகும் இச் சேயூர்.

இத்தலச் சிறப்பு, சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய "சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சுவிடுதூது" என்னும் நூலில், தேசிகர் வீற்றிருக்கும் இடங்களைக் கூறுமிடத்துக் காஞ்சி, முதுகுன்று (விருத்தாசலம்) என்னும் தலங்களைக் கூறிய பின்பு சேயூரைப்பற்றி —

வேதண்டம், ஒப்ப உயர்த்தவுய ருப்புக் குவான்மீது.
வெப்ப மறுமதிய மெய்யுரிஞ்ச **** நெடிய
கலவ மயிலிவரும் கந்தவேள் தேரே
உலவ நிலைபெயர்வுற் றோடப் — புலவர்
இரப்பாரை யில்லாயி னீரகண்மா ஞால
மரப்பாவை சென்றுவரு தற்றென் — றுரைப்பாவில்
வைதலை யஞ்சி வளத்தா ரிரப்பவர்தா
மெய்தலை நோக்கி யிருந்துதவப் — பொய்தவிர
இல்லென் பதுமொருவ ரீயென் பதும் வினையாஞ்
சொல்லென்ப தின்றுபெயரச் சொல்லாக—நல்லவள
மிக்கெலா நாளும் விழவறா வீதியணி
திக்கெலா மேத்தமலி சேயூரும் —

எனச் சிறப்பாக வருகின்றது. இதனால் சுமார் 300 வருஷங்களுக்கு முன்னமே உப்புவளமும், கொடைச் சிறப்பும், தேர்விழாவும், நாள்தோறும் கோயிலில் திருவிழாவும்

பொலிய நின்று, திருநெல்வேலித் தலத்தைத் "திக்கெலாம் புகழுந் திருநெல்வேலி யுறை செல்வர்தாமே" எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் புகழ்ந்து கூறினது போல, சிவப்பிரகாச சுவாமிகள் "திக்கெலாம் ஏத்த மலி சேயூர்" எனப் பாராட்டும்படி இச்சேயூர் விளங்கிறது

மேற்சொன்ன உப்பு வளத்தையே அந்தகக் கவி வீரராகவரும்,

"உப்பளமெங்கு நிரப்பு செயூர்' (சிறுதேர்ப்பருவம் 2)

என்றும்,

"உமண ரமைத்த உப்பினமு முழவர் விளைப்ப விளை செந்நெற் குவையும் வெள்ளி யொளிக்கிரியும் செம்பொற் கிரியு மெனப் புரஞ்சூழ் செய்கை" (வருகைப்பருவம் 2)

என்று விசேஷித்தும்,

"வளமையு மிகுத் தளகையென நிகர்த்த வொரு சேயூர்."

[தாலப் பருவம் - 9] — குபேர நகரமாம் அளகாபுரிக்கு நிகராகும் சேயூர் என்று சிறப்பித்தும் தாம் பாடிய பிள்ளைத்தமிழிற் பாராட்டி யுள்ளார்.

இவ்வூர் உப்பு இதர ஊர் உப்புகளைவிட மிகவும் சிலாக்கிய மென்றும், மருந்துக்கு இந்த ஊர் உப்பே சிறந்த தென்றும் வைத்திய நூல்கள் கூறுவதாயும் தெரிய வருகிறது. ஊருக்கு ஒரு மைல் தூரத்தில் உள்ளது உப்பளம். இங்கே உத்தியோகஸ்தர்கள் வசிக்க மூன்று நான்கு பங்களாக்களும் அனேக வீடுகளும் ஒரு குளமும் உண்டு. அளத்தின் பரப்பு சுமார் 500 ஏகரா இருக்கலாம். கவர்ன்மெண்டாருக்கு இவ்வூர் உப்பால் வருமானம் வருஷத்துக்கு ரூபா இரண்டு லட்சங்களுக்கு அதிகமாகும். அளம் சாகுபடி காலத்தில் சேரியிலுள்ள ஆதி திராவிடர்கள் ஆண்பெண் அனைவரும் திரள்திரளாய் அளத்தில் வந்து உற்சாகத்துடன் வேலை செய்வார்கள்.

# III. வளவன் கழுக்குன்றன் பேறு பெற்றது.

சோழவம்சத்தாருக்குத 'திரையர்' எனப் பெயருண்டு. இவர்கள் தொண்டை நாட்டை யாண்டுவந்தவர்கள்; தொண்டைமான் வம்சத்தினர்கள். அந்த வம்சத்தில், "ஒற்றிகொண்டான்" என்னும சைவப் பெரியாரின் திருமகன் 'கழுக்குன்றன்' என்பவர் சேயூர் முருகப் பெருமானுடைய திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்து சிறப்பித்துப பின்னர்த தேர்த் திருவிழாவும் நடத்தி வைத்து முருகன் திருவருட் பிரசாதத்தைப் பெற்றனர். இங்ஙனம் இவர தோத்திருவிழா நடத்தின ஆண்டு சகம் 1443 (1521-22) கி. பி. இவருடைய அளவிறந்த பக்தியையும்திருத்தொண்டையும் பாராட்டிக் கவி-வீரராகவ முதலியார் பின்வரும பாடலிற் சிறபபித்துள்ளார்:

"—வரம்பெற்ற வொற்றிகொண்டான்
சைவத் தவப்பயனை யொத்தவன் வழிவந்த
தநயன் கழுக்குன்றனுந்
தக்கசெம் பியவளவன் வந்தனக் காலயம்
சகலமுந் தந்ததற்பின்
பௌவத் தலத்தெழு சகாப்தமோ ராயிரத்
தொருநாலு நூற்றின்மேலும்
பயிலுநாற் பத்துமூ வருடமாம் விடவெருட
மகரம் பகுத்த திருநாள்
தெய்வத்திருத்தே ருருட்டியது." (சிறுதேர்ப்பருவம் 6.)

கழுக்குன்றன் சேயூர்ப் பெருமான் ஆலயத்துக்குத் தொண்டு செய்த புண்ணியத்தை :—

"புலிராஜன் வளவன் கழுக்குன்றன் வளமைபுரி
புண்ணியர் தரிசிக்கலாம்"

எனவும்,

கழுக்குன்றன் பேறுபெற்றதை —

"மையோத வாரிதித் திரையிற் பிறந்தனன்
லுளவன் கழுக்குன்றனு
மாருது நீயுமத் திரையிற் பிறந்தனை
வளவன் கழுக்குன்றனைச்
செய்யோ னெனப்புண் ணியம்புரிந் தகளங்க
ளுதவிற் செவ்வேலவன்
செஞ்சிலம் பிற்சீற டித்தாம ரைப்போது
சேவிக்க வாழ்வித்தனன்" — எனவும்

அம்புலிப் பருவத்திற் பாராட்டிப் பாடியுள்ளார்"

"திரைசையர் தொழுதெழு கிரிசை குமாரா
செங்கோ செங்கீரை." (செங்கீரைப்பருவம் 9)

என வருவதும் கவனிக்கற்பாலது.

இவ்வூர் உப்பு அளங்களில் ஒத்திக்கொண்டான், கழுக்கொண்டான், ஜெயங்கொண்டான் என்னும் பெயர்களால் இப்போதும் சில அளங்கள் உள்ளன. இவைகள் அக்காலத்தில் வியாபகத்திலிருந்த அன்னோருடைய பெருமையையும் ஆட்சியையும் ஞாபகப் படுத்துகின்றன. ஸ்ரீ முருகபிரான் ஆலயத்தில் "கழுக்குன்றன்" விக்கிரகங்கள் சிலாரூபமாயும் செம்புரூபமாயும இப்போதும் இருக்கின்றன. அவைகளுக்கு விசேஷகாலங்களில் தீப நைவேத்தியங்கள் நடைபெற்று வருகின்றன.

# IV. தேவர்கள் முனிவர்கள் வழிபட்டது

பிரணவத்தின் பொருள் தெரியாது திகைத்த பிரமனை முருகவேள் விலங்கிட்டுச் சிறையிட்டுத் தாமே சிருஷ்டித் தொழிலை நடத்தினர் அப்பொழுது திருமால், இந்திர ளுதிய தேவர்களும், முனிவர்களும் முருகபிரானுடைய சந்நிதியில் வந்து பிரமனைச் சிறையினின்றும் விடுவிக்க வேண்டும் என முறையிட்டுப் பணிந்தனர். அவ்வித பெருமை பெற்ற முருகவேள் வீற்றிருக்கும் சிறப்பு வாய்ந்த தலமாகும் இச் சேயூர்.

"பங்கக் கமலத் தவனைக் கமலப்
பததனை களைகவெனப்
பரிதித் திகிரிக் குலிசப் பாணிப்
பண்ணவ ரிருவருமத
துங்கத் தவருஞ் சாரும் பிறருஞ்
சொல்லும் வணக்கமொடுந்
தொழுத கரத்தொடும் வந்து நெருங்குந்
தொல்கோபுர முடையாய்
சிங்கக் குருளைத் திரனே களபத்
திரளைக் குருகுகொளத்
தேடித் தேடித் திரியும் பிடியுந்
திண்களி றுங்களிறுங்
கொங்கப் பழநிக் கொலிமலை முதலே
கொட்டுக சிறுபறையே
குகனே செய்கையின் மூவிரு முகனே
கொட்டுக சிறுபறையே."

(சிறுபறைப்பருவம் 6)

# V. தலசம்பந்தமான நூல்களும், நூற்பகுதிகளும்

1. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் :

இந்நூல் அச்சாயிருக்கிறது. அந்தகக்கவி - வீரராகவ முதலியார் பாடியது. இவர் 17-ஆம் நூற்றாண்டில் (1661) இருந்தார். செங்கற்பட்டு ஜில்லா பொன் விளைந்த களத்தூருக்கடுத்த பூதூரில் பிறந்தவர்; பிறவிக்குருடர்; கல்வியில் ஆதி சேடனையும் அகத்தியனையும் போன்றவர். இவர் திருக்கழுக்குன்றப் புராணம், திருவாரூர் உலா, சேயூர்க் கலம்பகம் முதலிய நூல்கள் இயற்றியுள்ளார்.

2. சேயூர்க் கலம்பகம் :

இதுவும் கவி - வீரராகவ முதலியார் பாடியது அச்சாக வில்லை.

"கவி வீரராகவன் சொற்ற பிள்ளைக்கவி
கலம்பகக் கவி வினவலாம் —

— பிள்ளைத் தமிழ், அம்புலிப்பருவம் (10).

3. சேயூர் முருகன் உலா :

இது சேறைக் கவிராஜ பிள்ளை பாடியது. இவர் 16-ம் நூற்றாண்டில் இருந்தவர்; இந்த உலாவை மிகப் பாராட்டி அந்தகக்கவி - வீரராகவ முதலியாரே

"கவிராச னிபபிரான் மிசை செய்த திருவுலாக்
கவி வெள்ளை கற்றருகலாம்"

எனச் சேயூர முருகன் பிள்ளைத்தமிழிற் கூறியுள்ளார். இந்நூல் இன்னம் அச்சேற வில்லை. அடியிற்கண்ட கண்ணிகள் அந்நூலிற் காணப்படுகின்றன :

சேயூர் முருகன் உலா — கண்ணி. 152 — 155

செவிரா சியங்கடந்த சேறைக் — கவிராசன்
சொன்ன உலாப்படித்துச் சோதிபெறத் தாலாட்டிக்
கன்ன லறிந்தந்திக் காபபேற்றி — யன்னநடை
காட்டியிடை காட்டியுடை காட்டிவிழி காட்டிமொழி
காட்டியியல் காட்டிமயல் காட்டியே — நாட்டவரைப்
பூவாடி யாராக்கிப் புன்முறுவ லாலுருக்குந்
தேவ ரடியார் திறஞ்சூழ * * * *

ஷை உலாச் சிறப்புப் பாயிரம் : வெண்பா

கொற்றவரெண் செய்யூர்க் குமர......
கற்றவ ரெல்லாங் களிக்கவே — வெற்றிக்
கருணேசன் சேறைக் கவிராச ராசன்
* * * * சொன்ன உலா.

## 4. சேயூர் முருகன பதிகக் கோவை

செவ்வேள் பதிகம், சநதப் பதிகம், திருபபுகழ்ப் பதிகம் என மூன்று பதிகங்கள் கொண்டது. இவை 1839-ம் வருடத்தில் தோன்றிய ஸ்ரீ முருகதாச சுவாமிகளால் பாடப்பட்டவை. இவருக்கு முருகதாச சுவாமி யென்றும, திருப்புகழ்ச் சுவாமி யென்றும, தண்டபாணி சுவாமி யென்றும் திருநாமங்கள் உண்டு. இவர் முருக பிரான் பேரன்பைப பெற்ற புனிதர். இளம்பிராயததிலேயே கண்டவர் மெச்சும் கவிபாடுந் திறமைவாய்ந்த

விற்பனர். இவர் தில்லைத் திருவாயிரம், அருணகிரிநாதர் புராணம், புலவர் புராணம், முதலிய பல நூல்கள் இயற்றியவர். இவர் பாடிய செய்யுள் இலக்கத்துக்கு அதிக மென்கின்றனர். இந்த "சேயூர் முருகன் பதிகக்கோவை" எம்மால் 1901-ஆம் வருஷத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

5. திருப்புகழ் :

அருணகிரி நாதர் இயற்றியது. பதினைந்தாம் நூற்றுண்டில் இருந்தவர்; முருகர் வரபிரசாதி. சேயூர் ஆதியில் முருகபிரானுடைய உறைவிடமானது பற்றி அங்ஙனம் காரணப் பெயர் பெற்றும, சுப்பிரமணிய ஸ்தலங்கள் தோறும் திருப்புகழ் பாடிச் சென்ற சுப்பிரமணியர் வரப்பிரசாதியாகிய அருணகிரி நாதரால் இவ்வூர் பாடல் பெற்றதாய்க் காணப்படாதது மெத்த ஆச்சரியமாயிருந்தது. இதைப்பற்றிப் பல பெரியோர்களை நான் முன்பு விசாரிததில் அடியிற்கண்ட திருப்புகழ் சேயூர் மீது அருணகிரிநாதரால் பாடப்பட்டது என்றும், அதற்கு ஆதாரவாக இரண்டு ஏட்டுப் பிரதிகளிற் காணப்பட்டதென்றும் தெரியவந்தது.

அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய
சேயூர் முருகன் திருப்புகழ்

முகிலாமெனும் வார்குழ லார்சிலை
புருவார்கயல் வேல்விழி யார்சசி
முகவார்தர ளாமென வேநகை புரிமாதர்

முலைமாலிணை கோபுர மாமென
வடமாடிட வேகொடி நூலிடை
முதுபாளித சேலைகு லாவிய மயில்போல்வரர்;

அகிசோல்கு லார்தொடை வாழையின்
அழகார்கழ லார்தா வேய்தரு
அழகார்கன நூபுர மாடிட நடைமேவி

அனமாமென யாரையு மால்கொள
விழியால்சுழ லாவிடு பாவையர்
அவர்பாயலி லேயடி யேனுட லழிவேனோ;

ககனார்பதி யோர்முறை கோவென
இருள்காரசு ரார்படை தூள்பட
கடலேழ்கிரி நாகமு நூறிட விடும்வேலா

கமலாலய நாயகி வானவர்
தொழுமீசுர னிட மேவிய
கருணாகர ஞானப ராபரை யருள்பாலா;

மகிழ்மாலதி நாவல்ப லாகமு
குடனாடவி லாமயில் கோகில
மகிழ்நாடுறை மால்வளி நாயகி மணவாளா

மதிமாமுக வாவடி யேனிரு
வினைதூள் படவே அயிலேவிய
வளவாபுரி வாழ்மயில் வாகன பெருமாளே.

6. நெஞ்சுவிடுதூது :

சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியது. இவர் பதினேழாம் நூற்றாண்டில் இருந்தவர். இந்நூலில் சேயூரைப் பற்றி இவர் புகழ்ந்து பாடியிருக்கின்றார்.

17-ஆம் பக்கம் பார்க்கவும்.

# VI. தீர்த்தம்

ஸ்ரீ கந்தசுவாமியார் ஆலயத்துக்கு மேற்றிசையில் சுமாா ஒரு பர்லாங்கு தூரத்தில் 'செட்டிக்குளம' என்று ஒரு தடாகம் உள்ளது. ஊர் ஜனங்களில் பெரும்பாலாாக்கு இந்த ஜலமே பானத்துக்கு உபயோகப்படுகின்றது. இதிலிருந்துதான் விசேஷகாலங்களில் சுவாமி அபிஷேகத்துக்குத் திருமஞ்சனம் கொண்டுபோவது வழக்கம். 10-ஆம் நாள் பிர்ம்ம உற்சவத்திலும், 6-ஆம் நாள் ஷஷ்டி உற்சவத்திலும் சுவாமி தீர்த்தவாரி போவதும், தைப்பூசத்தில் தெப்பவுற்சவம் நடைபெறுவதும், வேடர்பறி உற்சவத்தில் முருகபிரான் தினைமாவுண்டு தாகந் தீர்த்துக் கொண்ட ஐதிகம் கொண்டாடுவவதும் இந்தப் பொய்கையில்தான். செட்டி என்பது முருகர்க்கு ஒரு பெயர். "செட்டிக்குளம்" என்றால் முருகனுடைய குளம் என்பது பொருள். இந்தக் குளமும் அதன் கரையிலுள்ள விருக்ஷங்களும் ஸ்ரீ கந்தசுவாமியார் கோயிலுக்குச் சொந்தம்.

இவ்வூருக்கு ஆற்றுப்பாய்ச்சல் கிடையாது. பானத்துக்குரிய பெரியதடாகங்களுங் கிடையா. கடலுக்கடுத்த கிராமமாகையால், கிணறுகளில உள்ள ஜலமும் சிறிது உப்பாயிருக்கும். ஆகவே, செட்டிக் குளத்தில் உள்ள ஜலத்தை தேவஸ்தானத்தார் வேண்டுகோளுக்கிசைந்து ஜனங்கள் யாரும் அசுததம் செய்யாதபடி கிராம பஞ்சாயத்தார் காவல் வைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

# VII. திருவிழாக்கள்

ஸ்ரீ கந்தசுவாமியார் ஆலயத்தில் ஐப்பசி மாதத்தில் ஆறு நாள் கந்த ஷஷ்டி உற்சவமும், பங்குனி மாதத்தில் பன்னிரண்டு நாள் பிரம்மோற்சவமும், வெகு விமர்சையாக நடைபெற்று வருகின்றன. ஷஷ்டி உற்சவத்தில் 6-ஆம் நாள் சூரசம்மாரம் நடைபெறுகிறது. பிரம்மோற்சவத்தில் 4-ஆம நாள் நாகவாகனமும், 5-ஆம் நாள் மயில்வாகனமும், 6-ஆம் நாள் யானைவாகனமும், 7-ஆம் நாள ரதோற்சவமும், 8-ஆம் நாள் சூரசம்மாரமும் குதிரை வாகனமும், 12-ஆம நாள் வேடர்பறியும் சிறப்புடன் செயயபபட்டு வருகின்றன. வேடர்பறி உற்சவததில் கோயில் கணிகையர் வேஷம் பூண்டு வள்ளி நாயகியின் திருமணத்தைப் பழைய முறையில் நாடாக ரூபமாய் நடித்துச் சிறப்பிப்பார்களா. இந்த நாடகம் பெரிய மைதானத்தில் நல்ல நிலவு காலத்தில் நடைபெறுவதால் ஜனக்கூட்டம் ஏராளமாய்க்கூடி ஆனந்திப்பது வழக்கம். இவை யல்லாமல், தை, ஆடி, கார்த்திகை மாதங்களிற் கிருத்திகையிலும், மார்கழி மாசம் ஆருத்திராவிலும் உற்சவங்கள் நடக்கின்றன.

இந்த தேவஸ்தானத்துக்கு அழகிய தேர் ஒன்றும் சில வாகனங்களும் சொந்தமாய் உண்டு.

# VIII. கோயில் வருமானம்

இது பிரார்த்தனை தேவஸ்தானம். இவ்வூர் முருகர் வேண்டினோர்க்கு வேண்டியாங்கு வரந்தரும் கண்கண்ட தெய்வமாகப் பலராலும் கொண்டாடப்படுபவர். ஆகவே, இவரைத் தரிசனம் செய்யாதவர்களும், இடுக்கண் வந்துழி இவரிடம் பிரார்த்தனை செய்து கொள்ளாதவர்களும் இந்தப் பக்கங்களில் இல்லை யென்றே சொல்லலாம். இவருடைய உற்சவங்களும், கட்டளைகளும், பெரும்பாலும் இவருடைய அடியார்கள் பயபக்தியுடன் செலுத்தும் பொருள் உதவியைக் கொண்டு விமர்சையாக நடைபெற்று வருகின்றன.

தேவஸ்தானத்துக்குச் சொந்தமாக சில மான்னியங்களும், உப்பளங்களும், இலுப்பைத் தோப்புகளும் உண்டு. இவைகளின் வருமானமாக வருஷத்தில் சுமார் ரூ. 500 கிடைக்கும். காஞ்சிபுரம், மதுராந்தகம் முதலிய மேல்நாடு கீழ்நாடு நகரங்களில் உள்ள செங்குந்தமரபினர் இக் கோயிலுக்குப் பேராதரவு. இவர்கள் மிகவும் பக்தி யுள்ளவர்கள். மெத்தைக் கட்டுப்பா டுடையவர்கள். இவர்கள் முன்னோர்கள் சுமார் 300 வருஷங்களுக்கு முன்னரே இந்த தேவஸ்தான காரியங்களுக்கு ஈடுபட்டு, இக் கோயிலின் காலைசந்தி கட்டளைக்கும் பிரம்மோற்சவத்தில் சில உற்சவங்களுக்கும் தக்க ஏற்பாடுகள் செய்ய, அவைகள் அதுமுதல் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. மேற்படி தருமங்கள் தடைபடாது எப்போதும் சரிவர நடத்தும் பொருட்டு இக்கோயில் தருமகர்த்தாவாயிருந்த கழுக்குன்ற முதலியாருடைய காலத்தில் ஒரு தாமிர சாஸனம் ஏற்பட்டிருக்

கிறது. ஷை சாஸனத்தில் இன்ன இன்ன கிராமத்தார் இவ்வளவு வரி கட்டவேண்டியதென்றும் கண்டிருக்கிறது.

இவ்வளவு ஒழுங்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும், இந்த மரபினர் சில சமயங்களில் தங்கள் சொந்த விஷயங்களில் உள்ள கட்சி காரணமாகச் சுவாமி காரியங்களில் அசிரத்தை காட்டுவதையும், தங்களுக்குள்ள மனவேறுபாடுகளையும் அறவே ஒழித்து, இறைவன் அருளை முன்னிட்டு யாவரும் ஒன்றுகூடித் தொன்று தொட்டு தம் மரபினர் நடத்திவரும் மேற்படி தருமகாரியங்களைச் செவ்வனே செய்துவருமாறு கருணாநிதியாகிய கடவுள் கருணை புரிவாராக.

வருமானக் குறைவினாலும் விலைவாசி ஏற்றத்தாலும், காலதேச வர்த்தமானத்தாலும் வழக்கமாய் நடந்து வரும் காலைசந்தி, மாலைசந்தி கட்டளைகளும் திருவிழாக்களும் தற்காலம் வழக்கப்படி சிறப்புடன் நடைபெறுவது கஷ்டசாத்தியமாயிருக்கிறது. முருகருக்குத் தொண்டு செய்யும் பக்தர்கள் யாவரும் இக்குறைகளைக் கவனித்து, அவரவர்கள் செலுத்தவேண்டிய கட்டணங்களைச் சரிவரச் செலுத்திச் சுவாமி காரியங்களுக்கு இடையூறு நேராவண்ணம் முன்வந்து உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# IX. ஆலய நிர்வாகம்

இது பரம்பரை தேவஸ்தானம். தொன்றுதொட்டு எமது முன்னோர்களும், 1929-ஆவது வருஷம் முதல் யாமும் இந்த தேவஸ்தானத்துக்குத் தர்மகர்த்தாவாக விருந்து, 'அவனருளாலே அவன் றாள் வணங்கி', ஆலய நிருவாகம் நடைபெற்று வருகிறது. "முருகன், அவன் வேலையை அவனே கவனித்துக் கொள்வான்" என்பது இந்த ஆலயத்தில் என்றும் வழங்கும் ஒரு பழமொழி. எமது முன்னோர்கள் இந்த தேவஸ்தானத்துக்கு வருஷத்தில் 900 ரூபாய் வரக்கூடிய ஒரு ஜமீன் கிராமதத்தை ஏற்பாடுசெய்துள்ளார்கள். ஷை வருமானத்தை தேவஸ்தானம் வருஷப் பிரதி வருஷம் அடைந்து ஆலய நிர்வாகம் நடைபெற்று வருகிறது. தேவஸ்தான வரவு செலவு கணக்குகளை எண்டோமெண்டு போர்டார் வருஷவாரி தணிக்கை செய்து வருகிறார்கள்.

இந்த நெருக்கடிக் காலத்தில் குடும்பங்களை நடதது வதே கஷ்டம். ஆலயங்களை நடத்துவது அதைவிட கஷ்டம். அதிலும் வருமானமில்லாத ஆலயங்களை நடதது வது பின்னும் கஷ்டம். அங்ஙனமிருந்தும், இந்த ஆலய காரியங்கள் இதுவரைச் சிறப்புடன் நடைபெற்று வருதல் எம்மிறைவன் திருமுருகன் திருவருட் பெருக்கால் என்பதற் கையமில்லை.

# X. இவ்வூரில் உள்ள இதர கோயில்கள்

(i) ஈஸ்வரன் கோயில் :

ஊருக்கு வட கோடியில் உள்ளது. பழமையான பரமபரை தேவஸ்தானம். சுவாமி பெயர் வன்மீக நாதர்; அம்மன் பெயர் முத்தாம்பிகை. ஆதிகாலதில் இந்த ஆலயம் உள்ள இடத்துக்கு வன்மீகபுர மென்று பெயரென்றும், சுவாமி புற்றிடங் கொண்டவரென்றும், சுயம்புலிங்கமென்றும், ஒரு காலத்தில் தேவேந்திரனால் பூஜிக்கப்பட்ட தெய்வமென்றும் சொல்லப்படுகிறது.

இந்த ஆலயத்தின் விஸ்தீரணம் வடக்கு தெற்கில் 51 கஜம் ; கிழக்கு மேற்கில் 65 கஜம்.

இதற்குப் பிராகாரங்கள் இரண்டு ; முகத்துவாரத்தில் சிறிய கோபுரம் ஒன்றுண்டு. கோபுரவாயில் தெற்கு நோக்கியது. வெளிப்பிராகாரத்தில் தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளி. தென்மேற்கு மூலையில் விநாயகர், ஷண்முகர். உள்பிராகாரத்தில் கர்ப்பக் கிருஹத்துக்கு வலது பக்கத்தில் நாயன்மார்கள், அஷ்டலக்ஷ்மிகள், பிரம்மா, சாஸ்தா முதலிய விக்கிரகங்களும், பின்புறத்தில் சிலா விக்கினேஸ்வரர், உற்சவ சோமாஸ்கந்தர், அம்பாள், உற்சவ விக்கினேஸ்வரர், உற்சவ சுப்பிரமணியர், வேத கிரீஸ்வரர், விஸ்வநாதர், மூல சுப்பிரமணியர் முதலிய விக்கிரகங்களும், இடதுபுறத்தில் உற்சவ மூர்த்திகளும், சந்திர சேகரர், பராசத்தி முதலிய விக்கிரகங்களும் நிறைந்திருக்கின்றன. மூலஸ்தான வாயிலுக்குத் தென்புறத்தில் இப்போது கஜலக்ஷ்மி சிலா விக்கிரகம் நூதனமாய்ப் பிர

திஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு எதிரில் நவக்கிரஹங்களின் ஆலயம் அமைந்திருக்கின்றது. மூலஸ்தானவாயிலுக்கு வடபுறத்தில் நடராஜர் வீற்றிருக்கின்றார். மூலஸ்தான மண்டபத்துக்கு எதிரில் அம்மனுக்குத் தனிக் கட்டடமும், தனிப் பிராகாரமும், சர்வ வாத்திய மண்டபமும உண்டு. மூலஸ்தானத்துக்குத் தென்புறத்தில் பிரம்மோற்சவ மண்டபம் நூதனமாய் கட்டப்பட்டிருக்கிறது.

கோபுரவாயிலுக்கு எதிரில் விக்கினேஸ்வரர் கோயிலும், அதற்கு மேற்கில் திருக்குளமும் உண்டு. கோயிலுக்குப் பின்புறத்திலும் கிழக்கிலும் நந்தவனங்கள் நூதனமாய் ஏற்படுத்தபபட்டிருக்கின்றன. இக்கோயிலுக்குச் சந்நிதி வீதி அகலமும நீளமும அமைந்துள்ளது.

இந்த ஆலயத்துக்குப பிரம்மோற்சவம் தைமீ அமாவாசை கழித்து சஷ்டி முதல் பத்து தினங்கள் வெகு சிறப்பாய் நடக்கும். மார்கழி மாததில் ஆருத்திரா உற்சவமும், காாத்திகை உற்சவமும, நவராத்திரி உற்சவங்களும் நடைபெறுகின்றன. துடக்தார் குடும்பத்தினர் இந்த தேவஸ்தானததிலே பரம்பரை தாமகர்த்தாக்களாக விருந்து சுமார் 4000 ரூ. வருஷத்தில் வரக்கூடிய ஜமீன் சொததையும் அளததையும் இதற்கு மூலதனமாக ஏற்பாடு செய்திருக்கிறாகள். வருஷா வருஷம் ஷெ வருமானத்தில் செலவு போக மிகுதிபபடுவதிலிருந்து கோயில் திருப்பணி வேலைகள் நடந்து வருகின்றன. மேல்கண்ட உற்சவங்களும், திருப்பணி வேலைகளும், திருவாளர் செய்யூர் V. K. இராமசாமி முதலியார் அவர்களுடைய மேற்பார்வையில் ஒழுங்கான ஏற்பாட்டுடன்

நடைபெற்று வருகின்றன. எண்டோமென்டு போர்டார் வருஷவாரி கணக்குகளை தணிக்கை செய்து வருகிறார்கள். இந்த ஆலயத்தின் சுவர்களில் சில கல்வெட்டுகள் காணப் படுகின்றன. அவைளினின்றும் விளங்கும் விஷயங்களை அநுபந்தத்திற் காண்க.

## (ii) பெருமாள் கோயில் :

இது கந்தசுவாமியார் கோயிலுக்கு நேர் மேற்கில் உள்ளது. வடக்கு தெற்கில் 33 கஜம்; கிழக்கு மேற்கில் 54 கஜம். கோபுரவாயில் கிழக்கு நோக்கியது. முகத்துவாரத்தில் கோபுரம் இல்லை. இதற்குப் பிரகாரம் ஒன்று. தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளி. மூலஸ்தானத்துக்குத் தெற்கே இப்போது தாயார் சந்நிதி நூதனமாய் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வடக்கே ஆண்டாள் சந்நிதியும் உற்சவ மண்டபமும் பழமையாய் உள்ளன. சுவாமி பெயா கரியமாணிக்கப் பெருமாள்; தாயார் பெயா பெருந்தேவியம்மன். இதற்குச் சுமார் 500 ரூபா வருமானம் வரும். இதில கண்ணன் உறியடி, நவராத்திரி, பார்வேட்டை, கார்த்திகை, ஏகாதசி உற்சவங்கள் முதலியன நடைபெறுகின்றன. பிரதி சுக்கிர வாரமும் பெருமாள் ஆலயப் பிரதக்ஷிணம் செய்து வருகிறார். இக்கோயிலுக்குக் கிழக்கே ஆஞ்சநேயர் கோயில் ஒன்றுள்ளது.

## (iii) விநாயகர் கோயில் :

இது பெருமாள் கோயிலுக்குத தென்புறத்தில் உள்ளது. இது ஒரு சிறிய கோயில்: பொது ஜனங்களின் அபிமானத்தால் சிறப்புற்று விளங்குவது. விநாயகருக்கு வரசித்தி விநாயகர் என்று பெயர்.

(iv) கைலாசநாதர் கோயில் :

இது மிகவும் பழமையான கோயில் ; இதுவே இவ் ஆருக்கு முதலில் தோன்றிய கோயில் என்று சொல்லுகிறார்கள். இப்போது கோயிலும் கோபுரமும் இடிந்து பாழடைந்து கிடக்கின்றன இதிலும் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. [அநுபந்தம் பார்க்க.]

(v) கிராம தேவதைகள் :

துரோபதை அம்மன், பிடாரி அம்மன், கெங்கையம்மன், தீப்பாய்ஞ்ச அம்மன் முதலியன.

(vi) நவசந்திகள் :

சந்திகள் ஒன்பதுக்கும் பிள்ளையார் கோயில்கள் உண்டு.

# XI. ஊரின் முற்கால தற்கால நிலைமை

ஆதிகாலத்தில் இவ்வூர நீர்வளம் நிலவளம் பொருந்தி மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்து மாலதி, நாவல், பலா, கமுகு முதலிய சோலைகள் சூழ, அவற்றில் மயில், கோகிலம் முதலிய பறவை இனங்கள் கூட்டங் கூட்டமாய் ஆடிப்பாடி மிகச் சிறப்புடன் விளங்கியதாயும், அக்காலத்தில் ஐந்தாறு குக்கிராமங்கள் வெவ்வேறு பெயர்களுடனிருக்க, அவற்றுள் சேயூர என்பதே நடுநாயகமாய் விளங்கி யிருந்ததென்றும், பின்பு நாளடைவில் அந்தப் பெயர்கள் யாவும் மறையவும் அந்தக் கிராமங்கள் யாவும் ஒன்று சேர்ந்து இப்போது சேயூர் என்னும் தனிப் பெயருடன் விளங்குவதாகவும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். வன்மீகநாதர் இருந்த இடத்துக்கு வன்மீகபுர மென்றும், கரியமாணிக்கப் பெருமாள் இருந்த இடத்துக்கு மாணிக்கக் குப்பம் என்றும், அதற்குத் தெற்கே வெள்ளிமேடு, சோமநாதபுர மென்று இப்போது சொல்லப்படும் இடங்களுக்குச் சோழநல்லூர் என்றும் அக்காலத்தில் பெயர் வழங்கியதாயும் தெரிகிறது.

அக்காலத்தில் ஆட்சி செய்த சோழவளவன் என்பவனுக்கு வீரசோழன், வீரமார்த்தாண்டன், வீரயாதவன், வீரராஜேந்திரன், வீரசெம்பியன் என ஐந்து குமாரர்களிருந்ததாயும், அவர்களில் முதன் மூவரும் வட தெருவிலும், பின்னிருவரும் தென் தெருவிலும் வசித்து வந்ததாயும், சங்கராந்தி காலத்தில் இவ்விரு வீதியிலுள்ளாரனைவரும் ஒன்றுகூடி மனவேறுபாடின்றி ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று க்ஷேம லாபங்கள் விசாரித்துத் தாம்பூல

மரியாதைகள் பெற்றுப் புது வருஷப்பொங்கல் சந்தோஷம் கொண்டாடி வந்தனர்களென்றும் சொல்லப்படுகிறது. இந்த அருமையான வழக்கம் இவ்வூரில் சமீபகாலம் வரைச் சிறப்புடன் நடைபெற்று இப்போது ஒருவாறு கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வூர் விசாலமாயும், அழகாயும், சாற்சதுரமாயும கட்டப்பட்டுப் பொலிவுடன் இப்போது விளங்குகின்றது. தேரோடும் நான்கு வீதிகளும் சந்நிதித் தெருக்களும் அகலமாகவும் அலங்காரமாகவு மிருக்கும். ஊருக்குக் கிழக்கே உப்பளமும், அதற்கு ஒரு மைல தூரத்தில் சமுத்திரமும் உண்டு. கடலோரமான கிராமமானதால் உஷ்ண காலங்களில் வீசும் உப்பங் காற்று சுததமானதாயும் ஆனந்தத்துடன் அனுபவிக்கக்கூடிய இளந்தென்றல் காற்றுமிருக்கும். நீர்வளம், நிலவளம் பொருந்தி, ஆரோக்கியமாய் வசிப்பதற்கேற்ற தலங்களுள் ஒன்றாகும் இச் சேயூர். இவ்வளவு பெருமை வாய்ந்த இத்தலத்தில் வசிக்கும் அன்பர்கள் யாவரும் அநுதினமும் திருக்கோயில் சென்று எம் மிறைவனைத் தரிசனஞ் செய்து இகபர சுகங்களை யடைந்து இன்புறுவார்களாக.

"மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற இராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி".

வேலுமயிலுந் துணை

[அநுபந்தம்]

## கல்வெட்டுகள்

இவ்வூர் ஆலயக் கற்சுவர்களினின்றும் எடுக்கபபட்ட கல்வெட்டுகளிலிருந்து நமக்கு அனேக அருமையான விஷயங்கள் தெரியவருகின்றன. இக் கல்வெட்டுகளை கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர் Archeological Survey of India — New Imperial Series Vol. LIV. South Indian Inscriptions (Texts) Vol. VIII. No. 16-42. A. R. No. 430 to 454 B. of 1902 எனனும் புஸ்தகத்தில் பிரசுரம் செய்திருக்கின்றனர். மிகவும் பழமையான கல்வெட்டுகளானபடியால், அவைகளில அனேக எழுத்துக்களும, வரிகளும், அழிந்தும் மறைவுபட்டும் பின்னப்பட்டு மிருககின்றன. அவற்றில் பதிவு நெ. 16 முதல் 31 வரை வனமீகநாதர் ஆலயத தும், 32 முதல் 42 வரை கைலாசநாதர் ஆலயத்தும் எடுக் கபபட்டவை. ஷை சாசனங்களினின்று நாம் அறியக் கூடிய விஷயங்களாவன :—

**i. சாசனங்களின் காலம் :**

வீரராஜேந்திர தேவன், (மதுரையும், பாண்டியன் முடித்தலையையும், ஈழமும், கருவூருங்கொண்ட) குலோத்துங்க சோழதேவன், விக்ரம சோழதேவன், ராஜராஜேஸ்வர தேவன் என்னும் சோழ அரசர்களின் காலம் என்று ஏற்படுகிறது. எனவே, இச் சாசனங்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டில் (சுமார் 750 ஆண்டுகளுக்கு முன்) பொறிக்கப்பட்டன எனக் கொள்ளலாம்.

**ii. ஊரின் விளக்கம் :**

செய்யூர் என்பது ஜயங்கொண்ட சோழமண்டலத்திலே செம்பூர்க் கோட்டத்தில், புறையூர் நாட்டைச் சேர்ந்திருந்தது. செய்யூரானது வீரராஜேந்திர நல்லூர் என்றும் ஜயங்கொண்ட சோழ நல்லூர் என்றும பெயர்பெற்றிருந்தது.

**iii. தானங்கள் :**

மேற்படி சாசனங்களில் அடியார்கள் செய்த தானங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவை பெரும்பாலும் புற்றிடங்கொண்ட மகாதேவர்க்கு அதாவது வன்மீக நாதருக்கும், ஒரு சில பள்ளியறை நாச்சியாருக்கும் அதாவது பார்வதி தேவிக்கும், ஒரு சில ராஜேந்திர சோளேச்சுரம் உடையாருக்கும், அதாவது, கைலாச ந[illegible]ம் செய்யப்பட்டுள.

iv. தானங்களின் விவரம் :

(1) சந்தி விளக்கு வைப்பதற்காக ஆடு, பழங்காசு, புதுக்காசு, நிலம் — இவைகள் தானம்.

(2) நந்தா விளக்குக்காகப் பசு தானம்.

(3) நைவேத்யத்துக்காக நிலம் தானம்.

(4) திருவாபரணங்களுக்காகக் காசு தானம்.

(5) திருவிழாவில் (பதிகங்கள்) படிக்கும் சிரமத்துக்காகவும் பள்ளியெழுச்சிக்காகவும் உப்பு அளங்கள் தானம்.

மேற்படி தானங்களல்லாமல் திருமஞ்சனம், மாலை கட்டிக் கொடுக்குந் தொண்டு இவை சரிவரச் செய்வதற்காக உடன்படிக்கைப் பத்திரமும், கோயில் காணியாளர், சிவப்பிராமணர் அதாவது குருக்கள்மாருடன் உடன்படிக்கைகளும் பொறிக்கப்பட்டுள.

v. தானஞ் செய்தவர்களின் பெயர் விவரங்கள :

(1) சேனாபதிமாராயன், மதுராந்தகம ராஜராஜ நயபாலன்,

(2) ... சேரி அரையன் . . ராஜ ... தரையனும், அவன் தம்பி சோழ மதுராந்தகத் தேவரும்.

(3) வளவ திரையன் சிவகதி கங்கத்தேவர்.

(4) செய்யூர் வெள்ளாட்டி கோதைமகள் உய்யவந்தாள் (இந்த அம்மையார் புற்றிடங்ண்டார்க்கு சந்தி விளக்கு ஒன்றுக்காக ஆடு பன்னிரண்டு விட்டனர்.)

(5) செய்யூர்த் திரையன் தாங்கி மார்...

(6) நெல்குப்பை உடைச்சி அருந்தவஞ் செய்...

(7) செய்யூர் வேளாளன் நெய்தல் வாயிலுடை
வேளாண்தேவர்.

(8) மாதேவடிகள் கைக்கொண்ட ராஜாதிராஜ...
திரையன்.

(9) திரையன் ஒற்றிகொண்டான் திருச்சிற்ற...
முடையான் செம்பியன் வளவ திரைய...

(10) திரையன் மதுராந்தக தேவனை ராஜ கெ...
வளவன் முதற் சிலர்.

(11) திரையன் தேவர் கண்டன் — உத்தம சே...
வளவ திரையன்.

(12) செய்யூர் ஆதிச்ச தேவன் மகன் தில்லை
வேளாண்.

(13) வேளாளன் அரிந்தமன் திருநீலகண்டன்
முதலானோர்.

65520

Printed at the 'Caxton Press', Madras — 1944.